**நவம்பர் - 26**

**"கர்த்தர் மோசேயை நோக்கி : உன் கையிலிருக்கிறது என்ன? என்றார். – யாத் 4 : 2.**

எந்த ஒரு மனிதனாவது கர்த்தரால் அவருடைய பாக்கியமான ஊழியத்தில் மிகவும் அதிகமாக உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்றிருந்தால் அதற்க்காகத் தன்னை அதிகதிகமாகத் தகுதியாக்கிக் கொள்ள முதலாவது நாடுவானாக. அவன், அந்த நேச ஊழியக்காரனும், கனம் பண்ணப்பட்ட ஊழியக்காரனும் மோசேயின் மாதிரியை சாந்த குணத்தித்திலும், தாழ்மையிலும், திறனிலும், சலிக்காத பக்தி வைராக்கியத்திலும், கர்த்தருக்காகவுள்ள சுயதியாக ஊழியத்திலும் பின்பற்றுவானாக, அவன் ஞானமுள்ள உக்கிராணக்காரன் தன்னுடைய இயல்பான திறமைகளை விருத்தி செய்ய எப்பொழுதும் நாடுவான். தன்னுடைய முன்னேற்றத்துக்காக கர்த்தர் ஒரு அற்புதத்தைச் செய்ய எதிர்பார்க்க மாட்டான். ஆகையால் இயற்கையாகவே தன்னிடமில்லாததொன்றை விருத்தி செய்ய நாடி தன்னுடைய அரிய நேரத்தை வீணாக்க மாட்டான். ஆகையால், ஒவ்வொருவரும், தாழ்மையினாலும் பக்தி வைராக்கியத்தினாலும், கர்த்தருக்காகவும், அவர் நிமித்தமாகவுள்ள அன்பினாலும், அவருடைய வல்லமையிலுள்ள விசுவாசத்தினாலும், கர்த்தர் நம்மை அழைக்க பிரியமுள்ளவராய் இருக்கிற தெய்வீக உழியத்தின் எந்த பகுதியிலாவது நாம் உபயோகிக்கப்பட தயாராக இருக்கவும், பிரயோஜனமுள்ளவர்களாயிருக்கவும் செய்கிற அந்த இருதயத்தின், மனதின், நிலைமையிலிருக்க நாடுவோமாக. **- Z ’94, 143; ’01, 348 (R 1651, 2902).**

வேதாகமத்தின் அடையாளங்களில் கை அதிகாரத்தைக் குறிக்கிறது. ஆகையால் நம்முடைய கைகளில் ஏதாவதொன்றை வைத்திருப்பது, பொதுவாக நம்முடைய புது இருதயத்திற்கும், மனத்திற்கும், சித்தத்திற்கும், மனஷிகத்திற்கும் உரியதும் நம்முடைய அதிகாரத்தில் வைத்திருக்கிறதுமான காரியங்களைக் குறிக்கும். விசேஷமாக இது நம்முடைய அதிகாரத்தில் வைத்திருக்க வேண்டிய அறிவு, குணசீலம், குணம், அந்தஸ்து, நேரம், தாலந்துகள் (சந்தர்ப்பங்கள்) செல்வாக்கு, செல்வம், சிநேகிதர், சொந்தக்காரர், பட்டணவாச உரிமை , ஆரோக்கியம், ஜீவன் முதலியவற்றை குறிக்கும். நாம் எதுவாயிருக்கிறோமோ நம்மிடம் எது இருக்கிறதோ அவ்வழியில் நாம் ஊழியம் செய்ய கர்த்தர் விரும்புகிறாரே அல்லாமல் நாம் எதுவாயில்லையோ நம்மிடம் எது இல்லையோ, அவ்வழியில் அல்ல, ஆகையால் நமது மூலவாக்கியத்திலுள்ள கேள்வியின் மூலமாக, நாம் எதுவாயிருக்கிறோமோ, நம்மிடம் எது இருக்கிறதோ அவைகளை எண்ணவேண்டும் என்று கேட்கிறார். அவர் அதை அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக இக்கேள்வியை கேட்கவில்லை. ஆனால் நம்முடைய கர்த்தரின் மகிமைக்கென்றும் கிருபையில் மற்றவர்களுக்கு பிரயோஜனத்திற்கென்றும் நம்முடைய பிரயோஜனத்திற்கென்றும் நம்முடைய உக்கிராண விசாரிப்பை முன்னைவிட நன்றாகச் செய்ய சாத்தியமாக்கப்பட நம்முடைய உக்கிராண விசாரிப்பிலுள்ளதைப் பற்றி மறுபடியும் யோசனை செய்ய எச்சரிக்கை செய்து நம்மை நினைப்பூட்டுவதற்க்காக இக்கேள்வி கேட்கப்படுகிறது.

**– P ’36, 166.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**சங் 34:10; 68:35; 84:11; பிர 2:26; ஏசா 42:5; தானி 2:21-23; மத் 25:14,15; ரோம 12:6-8; 1கொரி 1:5-7; 7:7; எபே 4:7; 1தீமோ 6:17; யாக் 1:17; 1பேது 4:10; லூக் 12:47,48; 19:12,13.**

**கோபுர வாசிப்பு : Z `14, 78 (R 5418).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் என்னுடைய தாலந்துகளையும், சந்தர்ப்பங்களையும் கொண்டு என்ன செய்தேன்? ஏன்? எவ்வாறு? பலன்கள் எவை?**